# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


“நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன். இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவிசாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும்.” (யோவான் 10:15-16)

# நற்செய்தியின் அடிப்படையில் பணிவாழ்வு இருக்க வேண்டும்!

## திருத்தந்தை அறிவுறுத்தல்

வத்திக்கான்: இயேசுவை முதன்மையாகக் கொண்ட நற்செய்தியின் அடிப்படையில் நமது பணிவாழ்வு இருக்க வேண்டும் என்றும், துன்புறும் மக்களுக்குத் துணையாக இருக்கும்போது நாம் இயேசுவினது இரக்கம் மற்றும் நற்செய்தியின் சாட்சிகளாக இருக்கின்றோம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஏப்ரல் 6 சனிக்கிழமை வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் சிராகுசாவின் தூய ஆஞ்செலா மெரிச்சி அறக்கட்டளையின் 50ஆவது ஆண்டை முன்னிட்டு அதன் உறுப்பினர்கள் ஏறக்குறைய 170 பேரை சந்தித்தபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.



திருத்தந்தை பிரான்சிஸ் தூய Angela Merici நிறுவனத்தாருடன்

மிகவும் பலவீனமான மக்களுக்கான பணியில் தங்களை அன்றாடம் ஈடுபடுத்தி அர்ப்பணிப்புடன் பணியாற்றும் பிரான்சிஸ் அவர்கள், கண்ணீர் விடும் மரியாள் படம் பற்றி எடுத்துரைத்து அன்னையின் இரக்கத்தைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

துன்புறுவோரின் கண்ணீரைத் துடைத்தல், வேதனையிலிருப்பவர்கள் உடன் இருத்தல், பலவீனமானவர்களை ஆதரித்தல், மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களை கவனித்துக் கொள்ளுதல், பலவீனமான சூழ்நிலைகளை அனுபவிப்பவர்களை வரவேற்றல் ஏற்று கொள்ளுதல் போன்ற விலைமதிப்பற்ற பணிகளில் தொடர்ந்து கவனம் செலுத்தவும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பசி மற்றும் களைப்பினால் இருந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உணவளியுங்கள் என்று சீடர்களுக்கு இயேசு கட்டளையிட்டது போல, இன்று நம்மிடமும் ஒடுக்கப்பட்ட மற்றும் துன்புறும் மக்களுக்குத் துணையாக நிற்க அழைப்புவிடுக்கின்றார் என்றும், நாம் அனைவரும் இறுதி நாளில் அன்பினால் தீர்ப்பளிக்கப்படுவோம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்ற நற்செய்தி வரிகளுக்கு ஏற்ப கடவுளின் அன்பை, ஏழைகள் மீது நாம் வெளிப்படுத்த வேண்டும் என்றும், அந்த அன்பை ஆறுதலின் எண்ணெய் போல துன்புறுபவர்களின் காயங்களில் மருந்தாக ஊற்ற வேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அலட்சியம், தனிமனிதவாதம், கருணையற்ற இதயம் போன்றவை சமூகத்தின் மிக மோசமான தீமைகள் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், துன்புறுபவர்களுக்காக அழவும், பலவீனமானவர்கள் மீது இரக்கம் காட்டவும் வெட்கமுறாதீர்கள், ஏனெனில் அவர்களில் இயேசு இருக்கின்றார் என்றும் கூறினார்.

*மெரினா ராஜ் - வத்திக்கான்*

# ஜோகூர், ஸ்கூடாயில் ’இரக்கத்தின் ஆண்டவர்’ புதிய பங்கு உதயமானது

ஸ்கூடாய், ஜொகூர்: ஏறக்குறைய 24 ஆண்டுகளுக்கு முன்பு, மறைந்த மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர் ஜேம்ஸ் சான் அவர்களால் உருவாக்கப்பட்ட ஸ்கூடாய் கத்தோலிக்க மையம் இன்று ஓர் பங்கு ஆலயமாக மாற்றப்பட்டுள்ளது. முறகாலத்தில் மலேசியா தொழில்நுட்ப பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களுக்கான மேய்ப்புப்பணி நிமித்தம் ஏற்படுத்தப்பட்ட இந்த மையம், இப்போது திருஅவை சட்டம் 518-ன் படி பிரிதொரு பங்காக அங்கீகாம் பெற்றுள்ளது.

இப்போது இந்த மையத்தைச் சுற்றிலும் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் அதிகரித்துள்ளதையும் ஸ்கூடாய் நகரத்தின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, இது ஒரு பங்காக உருவாக்கம் கண்டுள்ளது.

மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர், பெர்னர்ட் பவுல் அவர்கள் கடந்த 7, ஏப்ரல் 2024-ம் திகதி, ‘இரக்கத்தின் ஆண்டவர்’ பெருவிழா அன்று, இப்பங்கிற்கு




‘இரக்த்தின் ஆண்டவர்’ எனும் பெயர் சூட்டி அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார். அன்றைய தினம் இப்பங்கின் பங்குத்தந்தை அருள்பணி லோரன்ஸ் இங் மற்றும் அருள்பணி ஜேம்ஸ் இராஜேந்திரன் அவர்களும் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட ‘‘திருஅவையில் ஆயர்களின் அருள்பணி’ பற்றிய விதித்தொகுப்பின் எண் 32-ல் படி, ‘பங்குகளை ஏற்படுத்துதல், அகற்றுதல்



இதுபோன்ற வேறு சீர்த்திருத்தங்களைப் புகுத்தல் என்பன பற்றி ஆராய்தலும் முடிவு செய்தலும் ஆயருக்குரிய அதிகாரத்தையே சார்ந்தது. இவை அனைத்தையும் மக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய மீட்புப் பணியை முன்னிட்டே அவர் செய்ய வேண்டும்’ எனும் சீர்த்திருத்த விதிக்கேற்ப இந்த புதிய பங்கு ஏற்படுத்தப்படுள்ளது.

*செய்தி தமிழாக்கம்: ஆர்.கே.*

# உலக அளவில் கத்தோலிக்க அருள்பணியாளர் எண்ணிக்கையில் சரிவு

2022-ம் ஆண்டின் உலக கத்தோலிக்க புள்ளிவிவரங்கள் தற்போது வெளியிடப்பட்ட 2024ஆண்டின் திருஅவை ஆண்டு புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

2021-ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2022-ம் ஆண்டில் உலகில் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை ஒரு விழுக்காடு அதிகரித்துள்ள தாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது 137 கோடியே 60 இலட்சத்திலிருந்து, 139 கோடியாக உலக அளவில் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

ஆப்ரிக்காவில் மட்டுமே கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தகும் வகையில் அதிகரித்துள்ளதாகக் கூறும் திருஅவை ஆண்டு புத்தகம், இது 3 விழுக்காடு, அதாவது 26 கோடியே 50 இலட்சம் என்பதிலிருந்து 27 கோடியே 30 இலட்சமாக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கிறது.

ஐரோப்பாவிலும் ஓசியானிவிலும் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை ஏற்றமும் இறக்கமும் இன்றி அதே அளவில் தொடர் வதாகவும், அமெரிக்கக் கண்டத்தில் 0.9 விழுக்காடும், ஆசியாவில் 0.6 விழுக்காடும் அதிகரித்துள்ள தாகவும், இது இவ்விரு கண்டங்களின் மொத்த மக்கள்தொகைப் பெருக்கத்தோடு இணங்கிச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021லிருந்து 2022-ம் ஆண்டில் உலகில் ஆயர்களின் எண்ணிக்கை 0.25 விழுக்காடு, அதாவது 5340 என்பதிலிருந்து 5353 ஆக உயர்ந்துள்ளது.

தேவ அழைத்தல்களின் எண்ணிக்கையும் குறைந்துவருவதைச் சுட்டிக்காட்டும் இந்த ஆண்டு புத்தகம், 2021-ம் ஆண்டில் உலகில் 470,872 அருள்பணியாளர்கள் இருக்க, இது 2022ஆம் ஆண்டில் 470730 அதாவது 142 குறைந்திருந்ததாகவும் தெரி விக்கிறது.

உலக அளவில் ஆண் மற்றும் பெண் துறவியரின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் இந்த ஆண்டு புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2021-ம் ஆண்டில் ஆண் துறவிகளின் எண்ணிக்கை 49 ஆயிரத்து 774ஆக இருந்தது, 2022-ம் ஆண்டில் 49 ஆயிரத்து 414 ஆக குறைந்துள்ளதாகவும், பெண்துறவிகளின் எண்ணிக்கையும் 6 இலட்சத்து எட்டாயிரத்து 958 என்பதிலிருந்து 5 இலட்சத்து 99 ஆயிரத்து 228 ஆக சரிந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மனித மாண்பு குறித்த திருஅவைக் கோட்பாடு வெளியிடப்பட்டது

**வத்திக்கான்:** கடந்த ஏப்ரல் 8, திங்கட் கிழமையன்று, திருஅவையின் மனித மாண்பு குறித்த திருஅவைக் கோட்பாடானது திருப்பீட விசுவாசக் கோட்பாட்டுத் துறையால் வெளியிடப்பட்டது.

போர் முதல் வறுமை வரை, புலம் பெயர்ந்தோருக்கு எதிரான வன்முறை முதல் பெண்களுக்கு எதிரான வன்முறை வரை, கருக்கலைப்பு முதல் வாடகை தாய் முறை மற்றும் கருணைக்கொலை வரை, பாலினக் கோட்பாடு முதல் டிஜிட்டல் வன்முறை வரை பல கருத்துக்களை உள்ளடக்கி மனித மாண்பு என்னும் திருஅவைக் கோட்பாட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

திருஅவையின் விசுவாசக் கோட்பாட்டுத் துறையின் ஐந்தாண்டுகள் நீடித்த பணியின் விளைவாக மனித மாண்புக்கு எதிரான கொடிய வன்முறை குறித்த அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. கருவில் உள்ள குழந்தைகள், மற்றும் இறந்து கொண்டிருப்பவர்கள் உயிரைப் பாதுகாப்பத்தில் கவனம் செலுத்துபவர்கள், ஏழைகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் வாழ்வைக் காக்க கவனம் செலுத்துபவர்கள் ஆகிய இருவருக்கும் இடையே இருக்கும் வேறுபாட்டை நீக்குவதற்கும் இக்கோட்பாடு உதவுகின்றது.

பகுத்தறியும் திறனின் விளைவாக திருஅவையானது பிறக்காத குழந்தை, முதியவர், மனநலக் குறைபாடு உடையவர் உட்பட எல்லா மனிதரின் மாண்பையும் மதிக்கின்றது என்றும், மனித மாண்பு எல்லாச் சூழல்களுக்கும் அப்பாற்பட்டது என்ற உண்மையை வலியுறுத்துகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித மாண்பு குறித்த கருத்து சில நேரங்களில் புதிய உரிமைகளின் பெருக்கத்தை நியாயப்படுத்த தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது என்று வலியுறுத்தி, வறுமை, போர் மற்றும் மனித வர்த்தகம் தொடர்பான கோட்பாடுகள் "மனித மாண்பின் சில கடுமையான மீறல்களின்" பட்டியலை முன்வைக்கிறது அக்கோட்பாடு. வறுமை என்பது சமகால உலகின் மிகப்பெரிய அநீதி, போர் என்பது மனித மாண்பை மறுக்கும் செயல் மற்றும் மனித குலத்திற்கான தோல்வி என்றும், அக்கோட்பாட்டில் குறிப்பிட்டு, குடும்பத்தை உருவாக்கவோ, வேலை



செய்யவோ உணவளிக்கவோ முடியாது தவிக்கும் புலம்பெயர்ந்தோரின் வாழ்க்கை ஆபத்தில் உள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

"மனித வர்த்தகமானது துன்பத்தின் பரிமாணங்களைப் பெறுகிறது, இத்தகைய இழிவான செயல்பாடு, நாகரீகமான சமூகம் என்று அழைக்கப்படும் நமது சமூகங்களின் அவமானமாக வரையறுக் கப்படுகிறது என்றும், மனித வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் அதன் பயனாளர்கள் அனைவரும், ஆன்ம ஆய்வுக்குத் தங்கள் மனதினை செலுத்த அழைப்பு விடுக் கின்றது.

மேலும் மனித உடல் உறுப்புகள் மற்றும் திசுக்கள் வர்த்தகம், சிறார் பாலியல் வன்முறை, அடிமைத் தொழிலாளர்கள், விபச்சாரம், போதைப்பொருள், ஆயுதக் கடத்தல், வன்முறை போன்ற அகில உலகக் குறங்களுக்கு எதிராக போராட அழைக்கப்படுகிறோம் என்பதை வலியுறுத் தியுள்ளது.

### ஆயுத உற்பத்தியும் வியாபாரமும்

பிறரை அடக்கியாள முயலும் மனிதனின் பேராசை, அரசியல் மற்றும் பொருளாதார ஆசைகள் இன்றைய உலகின் மகிழ்ச்சியின்மைக்குக் காரணமாக உள்ளன. மறுபுறமோ, ஆயுதங் களால் வரும் பொருளாதார இலாபத்தைக் குறித்து மகிழ்ச்சியடைபவர்களும் உள்ளார்கள்.

# புனித பூமியில் கிறிஸ்தவர்களின் வருங்காலத்தை இருளாக்கும் போர்

**வத்திக்கான் :** காசா பகுதியில் இஸ்ராயேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையே இடம்பெற்றுவரும் போர் புனித பூமி கிறிஸ்தவர்களின் வருங்காலத்தை இருள் நிறைந்ததாக மாற்றிவருகிறது என கவலையை வெளியிட்டுள்ளார் பிரான்சிஸ்



காசா பகுதியில் போரின் சேதங்கள்

கன் துறவி Ibrahim Faltas.

புனித பூமிக்கு பொறுப்பாளராக இருக்கும் துறவி இப்ராஹிம் உரைக்கையில், காசா, வெஸ்ட் பேங், மற்றும் இஸ்ராயேலில் வாழும் கிறிஸ்தவர்கள் ஏனைய மதத்தவர்களுடன் இணைந்து பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும், இயேசு வாழ்ந்த புனித பூமியில் கிறிஸ்தவர்களின் இருப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவருவதாகவும் தெரிவித்தார்.

பெரும் துயர்களை அனுபவித்துவரும் அப்பகுதியின் காயப்பட்ட மனித குலம் தன் விசுவாசத்திற்கு சான்று பகர்கின்றது எனக்கூறும் பிரான்சிஸ்கன் துறவி இப்ராஹிம் அவர்கள், வேதனைகளை தாங்குவதிலும் மற்றவர்களின் வேதனைகளைப் பகிர்வதிலும் அது சான்று பகர்கின்றது என மேலும் கூறினார்.

புனித பூமியில் சிறுபான்மையினராக வாழும் கிறிஸ்தவர்கள் இன்றைய துயர்களை எதிர்கொள்ள சிரமப்படுகிறார்கள் என உரைக்கும் துறவி இப்ராஹிம், காசாவில் எண்ணூறு கிறிஸ்தவர்கள் திருக்குடும்ப பங்குதளத்திலும், மேலும் இருநூறு கிறிஸ்தவர்கள் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் கோவிலிலும் அடைக்கலம் தேடியுள்ளதாகவும், அதில் பலர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்*

# நம் ஆயன், நம் ஆண்டவர் இயேசுவே!

இன்று பாஸ்கா காலத்தின் 4-ஆம் ஞாயிறு. இன்றைய வாசகங்கள் நமக்கு தந்தை இறைவன் மனுக்குலத்தின் மீது வைத்த அன்பைப் பற்றியும் அந்த அன்பினால் தம்முடைய ஒரே மகனை, இந்த உலக மக்களின் மீட்புக்காக, மக்கள் இழந்துபோன நிலைவாழ்வை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக இந்த உலகிற்கு அனுப்பினார் என்பதைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன.

முதல் வாசகத்தில் இயேசுவை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள முதலில் அஞ்சிய பேதுரு இயேசுவின் உயிர்ப்புக்குப் பின்னும், தூய ஆவியைப் பெற்றுக்கொண்டபின்னும், இயேசுவே மூலைக்கல் என்று அச்சமின்றி எடுத்துரைத்ததை வாசிக்கின்றோம். இயேசு ஒருவர் தான் நமக்கு மீட்பு தரமுடியும், இந்த உலகில் வேறு எந்த பெயரும் கொடுக்கப்படவில்லை என்று கூறுகிறார்.

இந்த வார்த்தை நம்முடைய நம்பிக்கையை மீண்டும் ஒருமுறை சீர்தூக்கிப் பார்க்க வைக்கின்றது. நம் வாழ்வில் அனுதினம் நாம் சந்திக்கும் சவால்களால் துவண்டு போகும்போது, நம்மை திசைதிருப்பவும், வீண் பேராசை காட்டி நம் நம்பிக்கையைத் தகர்க்கவும் சிலர் முயற்சித்திருக்கக்கூடும். நாமும் ஒரு சில வார்த்தைகளை நம்பி மனம் சஞ்சலப்பட்டிருக்கக்கூடும். ஆனால் நமக்கு மீட்பு ஒன்று உள்ளது, விண்ணக



வாழ்வு நமக்கு உண்டு என்றால் அது இயேசு ஒருவரால் அன்றி வேறு எவராலும் இல்லை என்று நாம் உறுதியாக நம்புவோம்.

நல்ல ஆயனாகத் தன்னை உருவகப் படுத்தும் இயேசு, ஆடுகளுக்காகத் தம்முடைய உயிரைக் கொடுப்பேன் என்று கூறியவர், வாக்கு மாறாத நம் இறைவன், நமக்காகத் தம் உயிரையேக் கொடுத்தார். ஆயன் தன்னுடைய ஆடுகளை அறிந்துள்ளார்; பெயர் சொல்லி அழைக்கின்றார். ஆடுகளின் அனைத்து செயல்களும் அவருக்கு முற்றிலும் தெரியும். ஆயன் நம்மை அறிந்துள்ளதுபோல, நாம் நம்முடைய ஆயனாகிய மீட்பரை அறிந்துள்ளோமா?

“இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்லவேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவிசாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும்” இயேசுவின் இந்த வார்த்தைகளை நாம் சிந்திப்போம்.

வேறுகொட்டில் என்றால்., வேற்று நம்பிக்கைக் கொண்ட மக்களாகவும் தாய் திரு அவையான கத்தோலிக்கத் திருஅவையை விட்டு, திருத்தந்தையின் ஒன்றிப்பை விட்டு வாழும் அனைவரும் ஒரே நம்பிக்கையும், ஒரே எண்ணமும், கொண்டு வாழவும் இயேசு அழைப்பு விடுக்கின்றார்.

**பாஸ்கா 4 ஆம் வாரம் - ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | தி.ப. 4: 8-12 |
| திரு.பாடல் | 118: 1,8-9. 21-23. 26,28,29 |
| 2-ம் வாசகம் | 1 யோவான் 3: 1-2 |
| நற்செய்தி | யோவான் 10: 11-18 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**

இந்த பாஸ்கா காலம் வழக்கமான ஒன்றாக மனம் மாறத் தவறவிட்ட ஒன்றாக இல்லாமல் தன்னுயிரைத் தந்த ஆயனின் குரல் கேட்டு, அவர் காட்டும் வழி சென்று, பசும்புல் மேய்ச்சலையும் குளிர்ந்த நீரோடையையும், இளைப்பாறும் இடமாக இருக்கும் நம் திருஅவையில் முழுமையாக நம்பிக்கை வைத்து மீட்பைக் கண்டடைவோம்.

ஆயனின் குரல் கேட்போம். வாழ்வைக் கண்டுகொள்வோம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*